2019 ஜூலை 2]

விலையில்லாமல் வழங்குவதுடன் அம்முயற்சியில் வெற்றி காணும் மாணவர்களுக்கும், மகளிருக்கும் சான்றிதழ்கள் வழங்கி, ஊக்கப்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு ஆவன செய்ய வேண்டுமெனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் விவசாயிகளுடைய நலன் கருதி என்னென்ன தேவைகள் இருக்கின்றனவோ, அவையனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒப்புக்கொண்டார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளின்படி, கிச்சிப்பாளையம், மணியனூர் ஆகிய இரண்டு இடங்களில், ஏதாவது ஓரிடத்தில் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

அடிப்படை வசதிகள்

***11929—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலையில் கொடுவந்துறை மேகம் நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலையில் கொடுவந்துறை மேகம் நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா என்ற வினாவினை சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. தா. உதயசூரியன் அவர்கள் எழுப்பியிருக்கின்றார்கள்.

விழுப்புரம் மாவட்டம், கல்வராயன்மலைப் பகுதியில் அமைந்துள்ள கொடுவந்துறை மேகம் நீர்வீழ்ச்சி கள்ளக்குறிச்சியிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலும், சங்கராபுரத்திலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவிலும், சேலத்திலிருந்து 85 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. மேலும் கல்வராயன்மலை, கடல் மட்டத்திலிருந்து 1,000 முதல் 3,800 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

கல்வராயன்மலைப் பகுதியில் அமைந்துள்ள கொடுவந்துறை மேகம் நீர்வீழ்ச்சிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அங்கு அடிப்படை வசதிகள் தேவைப்படும்பட்சத்தில் ஆராய்ந்து, அதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்பட்டு, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகம் நீர்வீழ்ச்சிக்கு தந்தை பெரியார் அவர்களுடைய*

2019 ஜூலை 2]

பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எங்களுடைய கழகத் தலைவர், மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள், மாநில இளைஞர் அணி செயலாளராக இருந்தபொழுது, அங்கு நடைபெற்ற பாசறைக் கூட்டத்திற்கு வந்திருந்தபொழுது, அந்த நீர்வீழ்ச்சியில் குளித்தார்கள். அதற்குப் பிறகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, எங்கள் கழக ஆட்சியில், மேகம் நீர்வீழ்ச்சிக்குப் போவதற்கு ஒத்தையடிப் பாதை இருந்தது. அதை அகலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு, அதைச் செய்தோம். ஆனால், அதற்கு பிறகு எங்களால் அந்த முயற்சியை எடுக்க முடியவில்லை. நீங்கள் 8 ஆண்டுக்காலமாக ஆட்சியில் இருக்கிறீர்கள். கல்வராயன்மலையில் இருக்கின்ற மக்களுக்காக சுற்றுலாத் துறைமூலம் கோடை விழா நடத்துவது வழக்கம். இந்த ஆட்சி வந்த பிறகு இந்த 3 ஆண்டுக்காலத்தில், 3 முறை கோடை விழாக்கள் சுற்றுலாத் துறை மூலமாக நடைபெற்றிருக்கின்றன. இப்போது 4 ஆம் முறையாக, வருகின்ற 13 மற்றும் 14 ஆம் தேதிகளில் நடத்த இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 3 கோடை விழா நிகழ்ச்சிகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர், D.F.O., மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் ஆகியோரை வைத்துக்கொண்டு 3 முறையும் இந்தக் கோரிக்கையை வைத்திருந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை ஆராய்ந்து விதிக்கேற்ப செய்வதாகச் சொல்லியிருக்கிறார். நான் 3 முறை இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறேன். இந்தக் கேள்வி 3 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கேள்வி. முக்கொம்பு என்று திருச்சியில் மூன்று ஆறுகளைச் சொல்வார்கள். அதுபோல் சேலம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் தருமபுரி மாவட்டம் சேர்ந்து, அந்த மூன்று மாவட்ட மலைகளிலிருந்து அதிகமான நீர் வருகின்ற நீர்வீழ்ச்சியாக இந்த மேகம் நீர்வீழ்ச்சி உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சரோடு கலந்து பேசி ஆவன செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. உங்களிடமும் 3 முறை நான் கோரிக்கையாக வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், . . .

திரு. தா. உதயசூரியன்: சொல்லுங்கள், அய்யா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். உங்களுக்கு 2 கேள்விகள். சுருக்கமாகக் கேட்டீர்களானால் நான் இன்னும் நிறைய பேர்களுக்கு கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுப்பேன்.

திரு. தா. உதயசூரியன்: முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கே இப்படி செய்தால் எப்படி?

திரு. தா. உதயசூரியன்: முடித்துவிடுகிறேன். ஏன் இவ்வளவு விளக்கமாக சொல்கிறேன் என்றால், இந்தக் கோரிக்கையை 3 வருடங்களாக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிலாவது அதிகமாக மக்கள் வருகின்ற அந்த இடங்களை சுற்றுலாத் தலமாக அமைத்து, மக்கள் பொழுதுபோக்குகின்ற இடமாக அமைத்துத் தருவதற்கு வனத் துறையோடு கலந்து பேசி, ஆவன செய்வதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர், திரு. உதயசூரியன் அவர்கள் கூறியதுபோல், கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்ற கோடைவிழாவில், நாங்கள் கலந்து கொண்டோம். விழுப்புரம் மாவட்டம், கல்வராயன்மலையில் கொடுவந்துறை மேகம் நீர்வீழ்ச்சி மற்றும் சிறுக்கலூர், சோராப்பட்டு நீர்வீழ்ச்சி ஆகிய இரு பகுதிகளும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. கரடு முரடான பாதையில் முள் செடிகள் வளர்ந்துள்ளதாலும், மலைப் பகுதியில் ஆங்காங்கே வழுக்குப் பாறைகள் அமைந்துள்ளதாலும், மேலும் இப்பகுதி வனத் துறையால் காப்புக் காடுகளாகப் பராமரிக்கப்பட்டு வருவதாலும், வனத் துறையிடம் கலந்தாலோசித்து, சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்து, சுற்றுலாத் துறைமூலம் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு சுற்றுலாத் தலம் செஞ்சிக்கோட்டைதான். எங்கள் மாவட்டத்தில் எஞ்சியிருப்பது கல்வராயன்மலை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறுக்கலூரைப் பற்றிச் சொன்னார்கள். நான் அதற்கும் கோரிக்கை வைத்தேன். சிறுக்கலூருக்கு அடுத்து, இன்னொரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. அது மாயம்பாடி நீர்வீழ்ச்சி.* (குறுக்கீடு) *3 நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தில் ஒரு சுற்றுலாத் தலம் தான் இருக்கிறது. ஆகவே, எங்கள் மாவட்டத்தில், 2–வது சுற்றுலாத் தலத்தை உருவாக்குவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுக்கலூர், தந்தை பெரியார் பெயரில் உள்ள மேகம் நீர்வீழ்ச்சி, மாயம்பாடியில் இருக்கின்ற நீர்வீழ்ச்சி ஆகிய 3 இடங்களில் ஏதாவது ஓர் இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துள்ள கோரிக்கையை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடமும் கலந்து பேசி, இந்த 3 நீர்வீழ்ச்சிகளில் ஏதாவது ஒரு நீர்வீழ்ச்சியை சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்றவகையில், சிறப்பாக உருவாக்குவதற்கு பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்கின்ற மேலான தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*